**செய்தி வெளியீடு எண்:006** **நாள்: 04.01.2020**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று **(4.1.2020)** சென்னை, காமராஜர் சாலையில் உள்ள மெரினா கிரிக்கெட் மைதானத்தில், தமிழ்நாடு அகில இந்திய குடிமைப்பணி மற்றும் மத்தியப் பணி அலுவலர்களுக்கான விளையாட்டுப் போட்டியினை துவக்கி வைத்து ஆற்றிய உரை.

---

இந்த காலைப் பொழுதில் சிறப்பான நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயகுமார் அவர்களே,

மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., அவர்களே,

காவல் துறை தலைமை இயக்குநர் மரியாதைக்குரிய திரு.திரிபாதி இ.கா.ப., அவர்களே,

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு முதன்மை செயலாளர்

திரு.தீரஜ் குமார், இ.ஆ.ப., அவர்களே,

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முதன்மைச் செயலாளர் / உறுப்பினர்

செயலர் திரு.ரமேஷ் சந்த் மீனா, இ.ஆ.ப., அவர்களே,

மற்றும் நிகழ்ச்சியில் பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற

முன்னாள் எம்.பி.அவர்களே,

ஐ.ஏ.எஸ்., மற்றும் ஐ.பி.எஸ்., அந்தஸ்து உள்ள உயர் அதிகாரிகளே,

மாணவ, மாணவிகளே,

இந்த நிகழ்ச்சியை கண்டு களிப்பதற்கு வருகை தந்து, அவர்களுக்கு உற்சாகமும்,

ஊக்கமும் அளிக்கும் வகையில், விழாவிலே பங்கு பெற்றிருக்கின்ற அனைவருக்கும்,

ஊடக மற்றும் பத்திரிகை நண்பர்களுக்கும்,

இரண்டு அணிகளுக்கு முதன்மை வகிக்கின்ற கேப்டன்களுக்கும்,

இந்த விளையாட்டிலே கலந்து கொண்டிருக்கின்ற விளையாட்டு வீரர்களுக்கும்,

என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விளையாட்டு என்பது உடல் ஆரோக்கியத்தையும், ஒரு கட்டுக்கோப்பான உடலையும் வளர்த்துக் கொள்வதற்கு மிக முக்கியம். அதுவும், உயர் அதிகாரிகளுக்கு பல்வேறு பணிச் சுமைகள் இருக்கிறது. அந்த பணிச்சுமைகள் எல்லாம் குறைய வேண்டுமென்று சொன்னால், விளையாட்டிலே நீங்கள் ஆர்வம் கொண்டு விளையாடுகின்றபொழுது, மனதில் இருக்கின்ற அழுத்தம் குறையும், மகிழ்ச்சி கூடும், உங்களது பணி சிறக்கும். எனவே, அதற்கு மிகமிக முக்கியம் விளையாட்டு. மாணவ, மாணவிகள்தான் விளையாட வேண்டும் என்பது கிடையாது. அது எந்த வயதானாலும் விளையாடலாம். விளையாடுவதற்கு உடல் ஆரோக்கியமும், உடல் வலிமையும் வேண்டும். ஆகவே, அந்த உடல் வலிமையையும், ஆரோக்கியத்தையும், கட்டுக்கோப்பான உடலையும் கொண்டு நேர்த்தியான ஒரு வாழ்க்கை வாழ்வதற்கு அவசியம் விளையாட்டு. அந்த விளையாட்டை இங்கே இருக்கின்ற உயர் அதிகாரிகள் மூலமாக இன்றைக்கு துவக்கியிருக்கின்றீர்கள். உங்கள் மூலமாக, நாட்டில் இருக்கின்ற இளைஞர்களும், பொதுமக்களும் பார்த்து, தாங்களும் விளையாடி உடல் ஆரோக்கியத்தை பேண வேண்டும், மன அழுத்தத்தை குறைக்க வேண்டும், மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்து, அகில இந்திய குடிமைப்பணி மற்றும் மத்திய பணி அலுவலர்களுக்கான விளையாட்டுப் போட்டியை துவக்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**